பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 04 2024 **TUESDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. காங்கிரசும், இடதுசாரி கட்சிகளும் நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. எதிக்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை அச்சுறுத்தும் வகையில் மத்திய அரசு செயல்படுவதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

3. மக்களவைக்கு முதல்கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் தேர்தல் ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் கனமழையால் 70க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

5. ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி மும்பை அணியை வென்றது.

>>>><<<<

காங்கிரசும், இடதுசாரி கட்சிகளும் நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கேரள மாநிலம், ஆட்டிங்கலில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திருவனந்தபுரத்தில் இடதுசாரிகளும், காங்கிரஸும் எதிரணியில் இருப்பதாகவும், திருநெல்வேலியில் இரு கட்சிகளும் கூட்டணியில் உள்ளதாகவும் கூறினார்.

கேரள மாநிலத்தில் பல ஆண்டுகளாக இவ்விரு கட்சிகளின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

உலக அளவில் பலவீனமான நாடு இந்தியா என்ற அவப்பெயரை காங்கிரஸ் உருவாக்கியதாகவும், தற்போது பிஜேபி அதை மாற்றியுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>><<<<

எதிக்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை அச்சுறுத்தும் வகையில் மத்திய அரசு செயல்படுவதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில், சிதம்பரத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலங்களுக்கான நிதி பகிர்வை வழங்குவதில், மத்திய அரசு பாரபட்சத்துடன் செயல்படுவதாக கூறினார்.

வாக்குறுதிகளை பிஜேபி அரசு நிறைவேற்றவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

நாடுமுழுவதும் மத்திய அரசு துறைகளில் 30 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது என்றும், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

>>>><<<<

மக்களவைக்கு முதல்கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் தேர்தல் ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் 39 தொகுதிகள், மத்தியப்பிரதேசத்தில் 6 தொகுதிகளில், மகாராஷ்ட்ரா மற்றும் அஸ்ஸாமில் தலா 5 தொகுதிகள், அருணாச்சலப் பிரதேசத்தில் 2 தொகுதிகள் உட்பட 102 தொகுதிகளில் வரும் 19ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடையும் நிலையில், வாக்குப்பதிவுக்கான நடைமுறைகள் மற்றும் பாதுகாப்புப் பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

>>>><<<<

ராஜஸ்தானில் முதல்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 12 மக்களவைத் தொகுதிகளில் இறுதி கட்ட பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

பிஜேபி மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பிஜேபி மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா ஜெய்ப்பூரில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு செயல்படுத்திய திட்டங்களால் அனைத்து தரப்பு மக்களும் பயன் அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். ராஜஸ்தான் மாநில வளர்ச்சியிலும் பிஜேபி அதிக கவனம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ராஜஸ்தான் மாநிலம் ஆல்வாரில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டில் பணவீக்கம் மற்றும் வேலையின்மை அதிகரித்துள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப பிஜேபி முயல்வதாக அவர் தெரிவித்தார்.

>>>><<<<

பீகாரில் முதல் கட்ட தேர்தல் நடைபெறவுள்ள ஜமுய், நவாடா, கயா மற்றும் அவுரங்காபாத் தொகுதிகளில் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

இந்த தொகுதிகளில் பல்வேறு அரசியல் கட்சிகளின் மூத்த தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும் உத்தரபிரதேச முதலமைச்சருமான யோகி ஆதித்யநாத் அவுரங்காபாதில் பிரச்சாரம் மேற்கொண்டார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உத்தரவாதம், வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான உத்தரவாதம் என்று அவர் தெரிவித்தார்.

ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத் யாதவ் ஷெர்காடி மற்றும் அவுரங்காபாத் பகுதிகளில் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். தேர்தல் பிரச்சாரங்களின் போது, இளைஞர்களின் நலன், வேலையின்மை பற்றி பேசுவதைத் தவிர்த்து தேவையற்ற விஷயங்களை பிஜேபி பேசி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

>>>><<<<

நாகாலாந்தில் உள்ள ஒரே மக்களவைத் தொகுதிக்கு வரும் 19–ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்கு பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

என்.டி.பி.பி–பிஜேபி கூட்டணி மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள், மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் பேரணிகளை நடத்தி வாக்கு சேகரித்து வருகின்றன.

இம்மாநிலத்தில் உள்ள ஒரே தொகுதியில் 3 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

13 லட்சத்து, 17 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

>>>><<<<

மிசோரம் மாநிலத்தில் மக்களவைத் தேர்தலை சுமுகமாக நடத்த விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறைத் தலைவர் திரு அனில் சுக்லா தெரிவித்துள்ளார்.

எய்ஸ்வாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 19 ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாகக் கூறினார். தேர்தலுக்காக மத்திய ஆயுத காவல் படைகளின் 12 கம்பெனி மாநிலத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பதற்றமான 19 வாக்குச்சாவடிகளுக்கும் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அவர் கூறினார்.

மணிப்பூர், திரிபுரா மற்றும் அசாம் மாநில எல்லைகளும் உள்ள மாநிலங்களுக்கு இடையேயான எல்லைகள் கண்காணிக்கப்படுவதாகவும், மியான்மர் மற்றும் பங்களாதேஷ் சர்வதேச எல்லைகள் சீல் வைக்கப்படும் என்றும் திரு சுக்லா தெரிவித்தார்.

>>>><<<<

சிக்கிமில் ஒரே ஒரு மக்களவைத் தொகுதிக்கும், சட்டப்பேரவையின் 32 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக 19–ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

அங்கு ஆளும் சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா, எதிர்க்கட்சிகளான சிக்கிம் ஜனநாயக முன்னணி பிஜேபி, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

>>>><<<<

எல்லைக்கு அப்பால் இருந்து வரும் சவால்களை திறம்பட முறியடிக்கும் வல்லமையை இந்தியா இப்போது பெற்றுள்ளது என பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா அனைத்து நிலைகளிலும் வலிமையான நாடாக உருவெடுத்துள்ளது என்றார்.

370-வது பிரிவு ரத்து செய்யப்பட்டதை தேசிய மாநாட்டுக் கட்சியும் மக்கள் ஜனநாயகக் கட்சியும் சொந்த அரசியல் ஆதாயங்களுக்காக எதிர்ப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

**DADP** கட்சியின் தலைவர் திரு. குலாம் நபி ஆசாத்தும், ஜம்மு காஷ்மீரில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

தமது கட்சியின் வளர்ச்சியை பிற கட்சிகள் அச்சம் அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

செனாப் பகுதியில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட தேசிய மாநாட்டுக் கட்சி துணைத்தலைவர் திரு ஓமர் அப்துல்லா, ஜம்மு காஷ்மீரில் புதிய தொழில்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

>>>><<<<

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த புலனாய்வு அமைப்பின் உயர்மட்டக் குழு இந்தியா வந்துள்ளது.

அந்தக் குழு நேற்று புதுதில்லியில் உள்ள மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ தலைமைக அலுவலகத்தை பார்வையிட்டு, அதன் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டது.

குற்றவியல் புலனாய்வில் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வது உட்பட பல்வேறு அம்சங்களில் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் அந்நாட்டுக் குழுவினரின் இந்தப் பயணம் அமைந்துள்ளதாக சிபிஐ கூறியுள்ளது.

நிதிக் குற்றங்கள், பயங்கரவாதம், இணையதளக் குற்றங்கள் மற்றும் எல்லை கடந்த அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகள் குறித்து சிபிஐ இயக்குநர் திரு பிரவீன் சூட் மற்றும் சிபிஐயின் மூத்த அதிகாரிகளுடன் அந்த குழுவினர் ஆலோசனை மேற்கொண்டனர்.

>>>><<<<

ஒடிசா மாநிலம் ஜஜ்பூர் மாவட்டத்தில் பேருந்து ஒன்று பாலத்தில் இருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்.

பூரியிலிருந்து மேற்குவங்க மாநிலம் ஹால்டியாவுக்கு அந்தப் பேருந்து சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது.

பலத்த காயமடைந்த பயணிகள் சிகிச்சைக்காக கட்டாக்கில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஒடிசா முதலமைச்சர் திரு நவீன் பட்நாயக் இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

பாகிஸ்தானில் கடந்த மூன்று நாட்களில் பெய்த கன மழை காரணமாக 36 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அடுத்த சில நாட்களில் அதிக மழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்துமாறு அந்நாட்டுப் பிரதமர் திரு ஷெபாஸ் ஷெரீப் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மார்ச் மாதத்தில் பாகிஸ்தானின் பல இடங்களில் வெப்ப அலை வீசிய நிலையில் இந்த மாதம் கன மழை மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதேபோல் ஆப்கானிஸ்தானில் காபூல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மழையால் அந்நாட்டில் 33 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் சில நாட்கள் கனமழை நீடிக்கும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

குவைத்தின் புதிய பிரதமராக அகமது அப்துல்லா அல்-அகமது அல்-சபாவை குவைத் அமீர் நியமித்துள்ளார்.

ஏற்கெனவே பிரதமராக இருந்த திரு ஷேக் முகமது சபா அல்-சலீம் அல்-சபா ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி மும்பை அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மேகன் பகான் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

லீக் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடித்துள்ள மோகன் பஹான் மற்றும் மும்பை அணிகள் ஏற்கெனவே அரையிறுதிக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.

19-ம் தேதி நடைபெறும் நாக் அவுட் சுற்று ஆட்டத்தில் ஒடிசா – கேரள அணியையும், 20-ம் தேதி நடைபெறும் நாக் அவுட் சுற்றில் கோவா – சென்னை அணிகளும் மோதவுள்ளன.

இவற்றில் வெற்றி பெறும் அணிகள் அரையிறுதிக்கு போட்டிக்கு தகுதிபெறும்.

>>>><<<<

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் தொடருக்கான இந்திய மகளிர் அணி

அறிவிக்கப்பட்டுள்ளது.